செ.வெ.எண்: 29 நாள்:20.12.2018

# பத்திரிக்கைச் செய்தி.

ஒருங்கிணைந்தப் பள்ளிக் கல்வித் திட்டம், அரியலூர் மாவட்டம், அரியலூர் ஒன்றியம் கரு.சேனாபதியில் செயல்பட்டு வரும் கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா உண்டு உறைவிட பள்ளியில் தங்கியிருந்து 6 முதல் 8 வரையிலான பெண் குழந்தைகளுக்கு கல்வி கற்ப்பித்திட முற்றிலும் தற்காலிகமாக தொகுப்பூதியத்தின் அடிப்படையில் பாடத்திற்கு ஒருவர் விதம் (தமிழ்- 1, ஆங்கிலம் -1, கணிதம்-1, அறிவியல்-1, சமூகஅறிவியல்- 1) பெண் ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர். விண்ணப்பிக்க விரும்பும் ஆசிரியர்கள் தகுதி தேர்வில ் தேர்ச்சி பெற்ற பட்டதாரி பெண் ஆசிரியர்களிமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்க்கப்படுகின்றன. விண்ணப்பங்களை தங்களது சுய விவரப்பட்டியல், தகுதி தேர்வின் தேர்ச்சி சான்றிதழ் நகல் மற்றும் அனைத்து சான்றிதழ்களின் நகலுடன், பணியில் முன் அனுபவலம் உள்ளவர்கள், அரசு விதிப்படி கல்வி அலுவலரிடமிருந்து பெறப்பட்ட அனுபவச் சான்றிதழ்களையும் இணைத்து கீழ்காணும் முகவரிக்கு 26.12.2018 தேதி மாலை 5 மணிக்குள் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோஅனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். குறிப்பிட்ட தேதிக்கு பின்னர் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி இயக்குநர், குடந்தைசேவாசங்கம், கஸ்தூரிபா காந்தி பாலிகாவித்யாலயா, கரு.சேனாபதி, அரியலூர் ஒன்றியம், அரியலூர் மாவட்டம். செல்.9443275231 என்ற முகவரிக்கு விண்ணப்பங்கள் அனுப்ப வைக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**